
# RESPECT WOMEN



## VAW தடுப்பிற்கான சாதகமான சூழலை வலுப்படுத்தல்

UN WOMEN

World Health Organization


ENABLING ENVIRONMENT

# VAW தடுப்பிற்கான சாதகமான சூழலை வலுப்படுத்தல்


## கண்ணோட்டம்

பெண்களுக்கு எதிரான வன்முறை (VAW) ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சமத்துவமற்ற அதிகார உறவுகளில் வேரூன்றியுள்ளது. இந்த பால்நிலை ஏற்றத்தாழ்வுகள் குடும்பங்கள், சமூகங்கள், பணியிடங்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குள் பாராபட்சமான சமூக விழுமியங்கள், நடைமுறைகள் மற்றும் கட்டமைப்புகள் மூலம் உருவாக்கப்பட்டு வலுப்படுத்தப்படுகின்றன. பால்நிலை ஏற்றத்தாழ்வுகள் சாதி, இனம், பாலியல் நோக்குநிலை, திறன்/இயலாமை மற்றும் குடியுரிமை நிலை போன்ற பிற குணாதிசயங்களின் அடிப்படையில் வன்முறை மற்றும் பாகுபாடுகளுடன் மேற்பொருந்துகின்றன.

பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதற்கு, வன்முறையைத் தூண்டும் அல்லது தடுக்கும் பரந்த சூழலைக் கையாள்வது மிகவும் முக்கியமானது. இந்த ஆவணம் தேசிய கொள்கை வகுப்பாளர்களும் அவர்களது நிதியளிப்பு பங்காளர்களும் VAW தடுப்புக்கான சாதகமான சூழலை நான்கு பிரதானமான வழிகளில் எவ்வாறு வலுப்படுத்தலாம் என்பதற்கான வழிகாட்டுதலை வழங்குகிறது:



அரசியல் அர்ப்பணிப்பை கட்டியெழுப்புதல்



மகளிர் நிறுவனங்களில் முதலிடுதல்




சட்டங்கள் மற்றும் கொள்கைகளை அமுலாக்கல்



VAW இனை நிவர்த்தி செய்வதற்கான வளங்களை ஒதுக்குதல்

# ENABLING ENVIRONMENT



## அரசியல் அர்ப்பணிப்பை கட்டியெழுப்புதல்

விளைவு: பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்காணிப்பதற்கும் பேசுவதற்கும் தலைவர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களிடமிருந்து அரசியல் உறுதிப்பாட்டை உருவாக்குதல்.

**மூலோபாயத்தின் குறிக்கோள்:** பல்வேறு நிலைகளில் உள்ள தலைவர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் - குறிப்பாக தேசிய, துணை தேசிய மற்றும் சமூகத் தலைவர்கள் - பால்நிலை சமத்துவமின்மை மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்து, அதைத் தடுப்பதற்கும் பதிலளிப்பதற்கும் ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**விளக்கம்:** பால்நிலை சமத்துவமின்மை மற்றும் VAW ஆகியவற்றைத் தடுப்பதற்கும் பதிலளிப்பதற்குமான அரசியல் அர்ப்பணிப்பை உருவாக்குவது RESPECT கட்டமைப்பை அமுல்படுத்துவதில் மையமாக உள்ளது. உதாரணமாக, தேசிய மற்றும் துணை-தேசியத் தலைவர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களிடமிருந்து ஒத்துழைப்பையும் ஆதரவையும் உருவாக்குதல், நெருங்கிய பங்காளர் வன்முறையை (IPV) ஒரு தனிப்பட்ட பிரச்சினை என்பதற்கு பதிலாக ஒரு மனித உரிமை மீறல் மற்றும் பொது அக்கறையின் சமூகப் பிரச்சனையாக அங்கீகரிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும். இந்த ஆதரவு கல்வி, சொத்துக்கள் மற்றும் தலைமைத்துவம் போன்ற பெண்களின் வலுவூட்டல் தொடர்பான அம்சங்களைக் கையாள்வதற்கு முக்கியமானது. அரசியல் தலைவர்கள் பால்நிலை சமத்துவம் மற்றும் VAW பிரச்சினைகளுக்குத் தெளிவை, விவரத்தை மற்றும் உத்வேகத்தை வழங்க முடியும் என்பதுடன் மற்றவர்களின் ஆதரவையும் செயற்பாடுகளையும் ஊக்குவிக்க முடியும்.

VAW ஐத் தடுப்பதிலும் பதிலளிப்பதிலும் முறையான மாற்றத்தை ஆதரிப்பதற்கு அரசியல் அர்ப்பணிப்பு ஒரு முக்கிய உள்ளீடென்பதுடன், இது புதிய சட்டங்கள், கொள்கைகள் அல்லது தேசிய செயற் திட்டங்களின் உருவாக்கம் மற்றும் அமுலாக்கத்தையும் நீடித்த நிதியியல் வளங்களின் ஒதுக்கீட்டையும் தேவைப்படுத்துகிறது. அரசியல் தலைவர்கள், பிற செல்வாக்கு மிக்க தலைவர்கள் மற்றும் முன்மாதிரிகளுடன் இணைந்து, பாகுபாடு மற்றும் வன்முறையைக் கண்டித்து பேசுவதன் மூலம் VAW ஐச் சுற்றியுள்ள சமூக விழுமியங்களை மாற்றும் செயற்பாட்டில் முக்கிய பங்கு வகிக்க முடியும்.[1]

### சம்பவ ஆய்வு: பிஜி

பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கு, உள்ளடங்கலான, முழு-அரசாங்கத்தின் தேசிய மூலோபாயத்தை உருவாக்கிய உலகின் முதல் நாடுகளில் பிஜி அரசும் ஒன்றாகும்.

ஐந்தாண்டு மூலோபாயம் (2020-2025) உயர் மட்ட அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளதுடன், அமுலாக்குவதற்கான தெளிவான மற்றும் செலவு பாதீட்டை கொண்டுள்ளது. சான்று அடிப்படையிலான அணுகுமுறையைப் பயன்படுத்தி, வன்முறையைத் தடுக்க குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை இந்த மூலோபாயம் உருவாக்கும்.

**கொள்கை வகுப்பாளர்களுக்கான பிரதான பரிசீலனைகள்:** செல்வாக்கு மிக்க தலைவர்கள் மற்றும் பிற கொள்கை வகுப்பாளர்களிடையே அரசியல் அர்ப்பணிப்பைக் கட்டியெழுப்புவதற்கான வழிகாட்டல் பணிக்கு பின்வரும் பிரதான பரிசீலனைகள் உதவும்.

| பிரதான பரிசீலனைகள் | விபரம் |
|---|---|
| **தேசிய, துணை தேசிய மற்றும் உள்ளூர் சமூகத் தலைவர்களை ஈடுபடுத்துதல்** | • தேசிய, துணை-தேசிய என அனைத்து மட்டங்களிலும் முக்கிய செல்வாக்கு மிக்க தலைவர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களையும் சமூக அளவிலான பங்குதாரர்களையும் இலக்காக கொள்ளவும். கிராமப்புற சமூகங்களிலுள்ள முறைசார் மற்றும் முறைசாரா சமூகத் தலைமைத்துவக் கட்டமைப்புகளை (தெரிவு செய்யப்பட்ட, பாரம்பரிய மற்றும் மதத் தலைவர்கள் உட்பட) ஈடுபடுத்துவது குறிப்பாக மிகவும் முக்கியமானது என்று சான்றுகள் காட்டுகின்றன.[2] |

# ENABLING ENVIRONMENT

| பிரதான பரிசீலனைகள் | விபரம் |
|---|---|
| **செயற்பாட்டிற்கான தார்மீக மற்றும் பொருளாதார வழக்கை உருவாக்கல்** | • பெண்கள், அவர்களின் குழந்தைகள், குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் மற்றும் தேசியப் பொருளாதாரத்தின் மீதான எதிர்மறையான சமூக மற்றும் பொருளாதார தாக்கங்கள் மீதான சான்றுகள் மற்றும் இது உலகளாவிய சான்று அடிப்படையுடன் எவ்வாறு எதிரொலிக்கிறது என்பன உள்ளிட்ட தேசிய மற்றும் துணை தேசிய சூழலில் VAW இன் அளவு மற்றும் பரிமாணம் தொடர்பாக தலைவர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களிடையே விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு உள்ளூர் நிபுணர்களுடன் இணைந்து பணியாற்றுங்கள்.[3]<br>• தார்மீக மற்றும் பொருளாதார விவாதங்களை உருவாக்குங்கள்: பால்நிலை சமத்துவம் மற்றும் VAW ஆகியவை மனித உரிமைகளை மீறுவதுடன் குடும்ப நல்வாழ்வு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான தடைகளாகும். இந்த செய்திகளை பரப்பக்கூடிய பார்வையாளர்களையும் வெற்றியாளர்களையும் இலக்காக கொள்ளுங்கள்.<br>• தடுப்புச் செலவீனத்திற்கு எதிராக, செயலாற்றாத தன்மையின் பாரிய சமூக மற்றும் பொருளாதாரச் செலவீனங்களை வலியுறுத்துங்கள்.[4] |
| **பெண் இயக்கங்கள் மற்றும் பெண்கள் தலைமையிலான சிவில் சமூக அமைப்புகளுடன் நிதியளித்தல் மற்றும் பங்குதாரர் ஆகுதல்** | • VAW க்கு அதிக கவனம் செலுத்தி பரப்புரையாற்றும் தேசிய மற்றும் துணை தேசிய அளவிலான பெண்கள் தலைமையிலான அமைப்புகளின் குரல்களை வலுப்படுத்த ஆதரவு மற்றும் நிதியுதவி வழங்குதல். பெண் அமைப்புகளை ஆதரிப்பதன் மூலம் VAW க்கு தீர்வு காண்பதற்கான அரசியல் விருப்பத்தை உருவாக்க முடியும் என்பதனை சான்றுகள் காட்டுகின்றதுடன், மக்கள் ஆதரவை வெளிக்காட்டுவதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க முடியும்.[5]<br>• உள்ளூர், பிராந்திய மற்றும் உலக அளவில் பகிரப்பட்ட செய்திகளை உருவாக்குவது உட்பட, பெண்கள் இயக்கம், பெண்கள் உரிமை அமைப்புகள் மற்றும் சிவில் சமூகத்தின் பிற துறைகளில் VAW பரப்புரை நிகழ்ச்சி நிரலைச் சுற்றி ஆதரவு கூட்டணியை உருவாக்குதல். |
| **தரப்பினருக்கிடையான ஆதரவை கட்டியெழுப்புதல் மற்றும் அரசாங்கத்திற்கிடையான கட்டமைப்புகளைப் பயன்படுத்துதல்** | • VAW ஐத் தடுப்பதற்கும் பதிலளிப்பதற்கும் தரப்பினருக்கிடையிலான மற்றும் அரசுகளுக்கிடையிலான ஆதரவை கட்டியெழுப்புதல். பால்நிலை ஏற்றத்தாழ்வுகள் மற்றும் VAW ஆகியவற்றில் பணிபுரிய உத்தரவளிக்கப்பட்டுள்ள தற்போதைய அரசாங்கக் கட்டமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுதல் மற்றும் வலுப்படுத்துதல். உதாரணமாக, பால்நிலைக்கு பொறுப்பான அமைச்சு மற்றும் அரச நிறுவன அமைப்புகளுக்கிடையில் பணியாற்றுவது, பாராளுமன்றம் உட்பட அரசாங்கத்தை மேலும் பால்நிலை பொறுப்புணர்வுள்ளதாக உருவாக்குவதற்கான வினைத்திறனான வழிகளாக இருக்கும்.<br>• பால்நிலைக்கு பொறுப்பான பெரும்பாலும் வரையறுக்கப்பட்ட அரசியல் செல்வாக்கு, இயலளவு மற்றும் பாதீட்டைக் கொண்டிருப்பதால், ஏனைய அமைச்சின் பங்காளர்களைத் தேடுவதும், முடிந்தவரை இயலளவை வலுப்படுத்துவதும் பயனுள்ளதாக இருக்கும்.<br><br>VAW **இனைத் தடுத்தல் 2014-2018 எனும் கம்போடியாவின் இரண்டாவது தேசிய செயற் திட்டம்** (NAP) **நீதிமன்றங்கள், வழக்கறிஞர்கள், உள்ளூராட்சி சபைகள், பொலிஸ் மற்றும் சிவில் சமூகத்துடன் கலந்தாலோசித்து வடிவமைக்கப்பட்டதுடன் தொடர்புடைய அரச அமைச்சுகள், அபிவிருத்தி பங்காளர்கள், சிவில் சமூகம், மற்றும் தப்பிப் பிழைத்தவர்கள் மற்றும் பல தரப்பினரை உள்ளடக்கியது.** |
| **தேசிய மற்றும் சர்வதேச சட்டம் மற்றும் கடமைகளை பயன்படுத்தல்** | • சர்வதேச மற்றும் பிராந்திய சாசனங்கள், பிரகடனங்கள் மற்றும் தீர்மானங்கள் மற்றும் ஏற்கனவே உள்ள தேசிய சட்டம் மற்றும் கொள்கைகளை செறிவான அரசியல் உறுதிப்பாட்டிற்கான பரப்புரைக்கான, தேசிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளை மேலும் மேம்படுத்த மற்றும் அவற்றை அமுலாக்குவதற்கான அடிப்படையாக பயன்படுத்தவும். இவை நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) உள்ளடக்குவதுடன் தேசிய நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் கொள்கைகளை கட்டமைப்பதற்கும் பிராந்திய மற்றும் சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் கருவிகளை (உதா. CEDAW, Maputo Protocol, Belém do Pará மற்றும் Instanbul Convention) சட்டரீதியாக பிணைக்கும்.<br>• ஐ.நா மற்றும் பிற பல்தரப்பு அல்லது பிராந்திய மன்றங்களில் VAW தொடர்பில் தேசியத் தலைவர்கள் தலைமைத்துவத்தைக் காட்டுவதற்கான வாய்ப்புகளைத் தேடுங்கள். |

| பிரதான பரிசீலனைகள் | விபரம் |
|---|---|
| VAW **பிரச்சினைகளின் வெளிப்படுநிலையை அதிகரித்தல்** | • VAW இன் தாக்கம் மற்றும் தீவிரம் மற்றும் அதன் விளைவுகளை ஆவணப்படுத்துவதற்கான தரவுகளை சேகரிக்கவும். தரவு சேகரிப்பு செயற்பாட்டில் தேசிய பங்குதாரர்களிடமிருந்து உரிமையை கட்டியெழுப்புவதற்கான மற்றும் ஒத்துழைப்பை பெறுவதற்கான வழிகளைத் தேடுவது அவசியமானது.<br>• VAW க்கு எதிராக பேசுவதற்கு தேசிய மற்றும் உள்ளூர் மட்டங்களில் தலைவர்கள் மற்றும் பொது நபர்களை தூண்டுதல் மற்றும் ஊக்குவித்தல். உதாரணமாக, ஆபிரிக்காவின் துணை-சஹாராவில் VAW க்கு எதிராக முதற் பெண்மணிகள் பல பிரச்சாரங்களை மேற்கொண்டுள்ளனர்.[8]<br>• விளையாட்டு நட்சத்திரங்கள் மற்றும் பிரபலங்கள் உட்பட பிற துறைகளைச் சேர்ந்த வெற்றியாளர்களைக் கருதுங்கள்.<br>• VAW முடிவுக்கு கொண்டுவருவதற்கு ஆதரவாக பொது அறிக்கைகளை வெளியிட தலைவர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு பொருத்தமான தளங்கள் மற்றும் வாய்ப்புகளை வழங்குதல்.<br>• தீங்கு விளைவிக்கும் பால்நிலை விழுமியங்கள் மற்றும் ஒரே மாதிரியான உள எண்ணங்களை வலுப்படுத்துவதற்குப் பதிலாக வன்முறையின் அளவு, காரணங்கள் மற்றும் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக VAW பற்றிய அறிக்கையிடலை மேம்படுத்த ஊடகங்களுடன் இணைந்து பணியாற்றுதல்.[9]<br>• மகிழ்வூட்டும் வகையிலான கல்வி மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் அதிக எண்ணிக்கையிலான மக்களைச் சென்றடையும் ஆற்றலைக் கொண்டுள்ளதுடன், அவை VAW பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த உதவுகின்றன - இருப்பினும் அவை தாங்களாகவே வன்முறையைக் குறைக்கும் என்பதற்கு இதுவரை எவ்விதமான சான்றுகளும் இல்லை.[10] |

### சம்பவ ஆய்வு: சியரா லியோன்

சியரா லியோனில், சிவில் சமூக அமைப்புகளால் பல உயர்மட்ட பாலியல் வன்புணர்வு சம்பவங்கள் மற்றும் கடந்த ஆண்டின் பாலியல் வன்புணர்வு சம்பவங்களின் கூர்மையான அதிகரிப்பைக் காட்டும் தரவுகளைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் மீது அழுத்தம் கொடுக்கப்பட்டது. இதில் முதற் பெண்மணி தலைமையிலான பிரச்சாரமும் அடங்குவதுடன், பிப்ரவரி 2019 இல் ஜனாதிபதி VAW மீது அவசரகால நிலையை அறிவித்ததுடன், இது தப்பிப்பிழைத்தவர்களுக்கு புதிய சட்ட ஏற்பாடுகள் மற்றும் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனைகள் உட்பட புதிய விதிமுறைகளை உடனடியாக அறிமுகப்படுத்த அவரது அரசாங்கத்தை அனுமதித்தது.

அவசரகாலச் சட்டம் அரசாங்கம் விரைவாகச் செயற்படவும், பாலியல் வன்முறைப் பிரச்சினையில் தேசிய கவனத்தைச் செலுத்தவும், நீதிமன்ற வழக்குகளைத் துரிதப்படுத்தவும் உதவியது. ஆனால் ஒரு கலப்பான பதிலளிப்பு காணப்பட்டதுடன், சட்டமன்ற மாற்றத்தை ஏற்படுத்த அவசர நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதற்கான சட்டப்பூர்வத்தன்மை குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளிக்கும் விதமாக, அரசாங்கம் யூன் 2019 இல் அவசரகால நிலைமையைத் திரும்பப் பெற்றதுடன், அதன் மாற்றங்களை பாராளுமன்றம் மூலம் மீண்டும் அறிமுகப்படுத்தியது, இது 2012 ஆம் ஆண்டின் பாலியல் குற்றச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு செப்டெம்பர் 2019 இல் நிறைவேற்றப்பட்டது. இந்த மாற்றங்களில் பலாத்காரத்திற்கான குறைந்தபட்ச தண்டனையை அதிகரிப்பது மற்றும் அதிகாரத்தில் உள்ள நபர்களால் (உதா. ஆசிரியர்கள்) வேண்டுகோள் விடுத்தல் போன்ற புதிய குற்றங்களுக்கான ஏற்பாடுகள் ஆகியவை அடங்கும்.

**ஆதாரம்:** Martin, L.S. and Koroma (2020) சியாரா லியோன் பாலியல் வன்முறைக்கெதிராக அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தியது

ஆபிரிக்க விவாதங்கள்

### மேலதிக ஆதாரங்கள்:


'Feminist mobilisation and progressive policy change: why governments take action to combat violence against women' Weldon, S.L. and Htun, M. in Gender & Development 21 (2). 2012. 1985 முதல் 2005 வரையிலான காலப்பகுதியில் 70 நாடுகளில் VAW மீதான இந்த பகுப்பாய்வு, கொள்கை மாற்றத்தை தூண்டும் மிக முக்கியமான மற்றும் நிலையான காரணி பெண்ணியச் செயற்பாடு என்பதை வெளிப்படுத்துகிறது.

'Economic and Social Costs of Violence: Evidence Brief' VAWG இனை தடுக்கும் நிகழ்ச்சித் திட்டத்தில் என்ன வேலை செய்கிறது. 2020. அரசியல் தலைவர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுடன் உரையாடுவதற்கான பயனுள்ள கருவியை இந்த சான்றுச் சுருக்கம் வழங்குகிறது. பாகிஸ்தான், கானா மற்றும் தெற்கு சூடானில் தேசிய பொருளாதாரங்கள் மற்றும் சமூகத்தில் VAWG இன் தாக்கம் தொடர்பான முக்கிய கண்டறிவுகளை இது வழங்குகிறது.

'Estimating Macroeconomic Loss Due to Violence Against Women and Girls: A Policy Toolkit.' Raghavendra, S., Kim, K., Ashe, S., Chadha,M., Piiroinen, P.T. and Duvvury, N. Galway: NUI Galway. 2019. இந்தக் கொள்கை கருவித்தொகுப்பு VAWG காரணமாக ஏற்படும் நேரடியான மற்றும் மறைமுக செலவீனங்களை மதிப்பிடுவதற்கான எளிய வழிகாட்டியை வழங்குகிறது. வளர்ச்சியின் மீது வன்முறை சுமத்தும் செலவீனத்தை மதிப்பிடுவதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கான செலவீனங்களை வெளிப்படுத்தும் வழியையும் கருவித்தொகுப்பு வழங்குகிறது.

Global Scoping of Advocacy and Funding for the Prevention of Violence Against Women and Girls. சமத்துவ நிறுவனம் (2019). இந்தத் தாள் 2012-2017 இலிருந்தான VAWG தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கான நிதியளிப்பு போக்குகள் மற்றும் நன்கொடையாளர்கள், கற்றுக்கொண்ட பாடங்கள், வாய்ப்புகள், பரப்புரை மற்றும் நிதியளிப்பிற்கான இடைவெளிகள் மற்றும் பரிந்துரைகளை வழங்குகிறது.

# ENABLING ENVIRONMENT



## மகளிர் நிறுவனங்களில் முதலிடுதல்

**விளைவு:** பெண்கள் அமைப்புகளில் முதலீடு, பணிகளை உருவாக்குதல், வளங்கள் மற்றும் ஆதரவு வழங்கல்..

குறிக்கோள்: பெண் உரிமை அமைப்புகள் மற்றும் இயக்கங்கள் பால்நிலை சமத்துவத்திற்காக பரப்புரையாற்றுவதற்கும், புத்தாக்கமான மற்றும் வினைத்திறனான வன்முறை தடுப்பு மற்றும் பதிலளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கும், மற்றும் அரச மற்றும் அரச சார்பற்ற தரப்பினர் பெண்களுக்கு பொறுப்புக் கூறுவதை நிலைநிறுத்துவதற்குமான வளங்கள், இயலளவு மற்றும் இடம் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

விளக்கம்: பெண் உரிமை அமைப்புகள் (WROக்கள்) தப்பிப் பிழைத்தவர்களை ஆதரிப்பதில் முன்னரங்கில் உள்ளதுடன், பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் (VAW) தடுப்பதற்கும் அதற்கு பதிலளிப்பதற்கும் முன்னோடியான வினைத்திறனான மாதிரிகளை கொண்டுள்ளன. இதில் பின்வருவன அடங்கும்: வன்முறையின் அளவைக் குறைக்கும் சமூக அணிதிரட்டல் மூலோபாயங்களை வடிவமைத்தல், சிறந்த ஆற்றுப்படுத்தல் அமைப்புகள் மற்றும் முறைசார் சேவைகளுக்கு (உதா. பெண் பொலிஸ் நிலையங்கள், குடும்ப நீதிமன்றங்கள்) பரப்புரையாற்றுதல், முறைசாரா சேவைகளை வழங்குதல் (உதா. தங்குமிடங்கள், உளவியல் சமூக ஆதரவு) மற்றும் தப்பிப் பிழைத்தவர்களுக்கு நேரடியாக துணையாக இருத்தல், அதனால் அவர்களுக்குத் தேவையான சேவைகளை அவர்கள் அணுக முடியும், மற்றும் VAW ஐக் கண்காணிக்கவும், பெண்களின் பாதுகாப்பை ஆதரிக்கவும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல் என்பனவாகும்.[11]

பெண்களின் உரிமைகள் அமைப்புகள், உள்ளூர் உரிமையை உடைய பெண்களுக்கு பொறுப்புக் கூறுகின்ற பெண்களின் கூட்டுச் செயற்பாட்டிற்கான தளங்களை உருவாக்கி, சமூக மாற்றத்திற்காக பரப்புரையாற்றுகின்றன. பெண்ணிய இயக்கங்கள் சட்டத்தில் மாற்றங்களுக்காக பரப்புரையாற்றியதுடன், பெண்ணிய இயக்கங்களின் கொள்கை மற்றும் பரப்புரை மற்றும் அவற்றை இயக்கும் பெண் உரிமை அமைப்புகள் ஆகியன பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகளையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்கான தேசிய சட்ட மற்றும் கொள்கை கட்டமைப்பு முன்னேற்றங்களில் மிக முக்கியமான காரணியாக இருந்தமையை ஆராய்ச்சி காட்டுகிறது.[12]

தனிநபர் மட்டத்தில், பெண் உரிமை அமைப்புகள் குறிப்பாக பாரம்பரிய அரசியல் கட்டமைப்புகள் பெண்களை தவிர்க்கும் இடங்களில் பெண்கள் தலைமைத்துவ மற்றும் தீர்மானமெடுக்கும் வகிபாகங்களை ஏற்கும் வாய்ப்புகளை உருவாக்குகின்றன. இது பால்நிலை சமத்துவத்தை அதிகரிப்பதில் ஒரு முக்கிய காரணியான பெண்களின் அரசியல் அதிகாரம் பெறுவதற்கான வழியை வழங்குகிறது.[13]

ஆயினும்கூட, வன்முறையைச் சுற்றியுள்ள மூலோபாயமான, நிலைத்தன்மையான, கட்டமைப்பான மற்றும் செலவு குறைந்த சமூக மாற்றத்தை உந்துவதில் பெண் உரிமை அமைப்புகளின் பங்கு இருந்தபோதிலும், பால்நிலை சமத்துவத்திற்கான பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட உதவித் தொகையில் சுமார் 1.5% இனை மட்டுமே அவர்கள் பெறுகின்றனர்.[14] பெண்ணிய இயக்கங்கள் வன்முறையைத் தடுப்பதற்கும் அதற்குப் பதிலளிப்பதற்குமான முயற்சிகளைத் தொடர்ந்து வழிநடத்தவும் ஊக்கப்படுத்தவும், உள்ளூர் மற்றும் தேசிய பெண் உரிமை அமைப்புகளுக்குப் போதுமான நிதியுதவி மற்றும் VAW மீதான ஆராய்ச்சி, நிகழ்ச்சித் திட்டவாக்கம் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளலில் முக்கிய பங்கு தேவையாகும்.

கொள்கை வகுப்பாளர்களுக்கான முக்கிய பரிசீலனைகள்: பெண் உரிமை அமைப்புக்களில் முதலீடு செய்வதற்கு உறுதிபூண்டுள்ள நிறுவனங்களுக்கு வழிகாட்டுவதற்கு பின்வரும் முக்கிய பரிசீலனைகள் உதவும்.

| பிரதான பரிசீலனைகள் | விபரம் |
|---|---|
| **பல்வேறுபட்ட பெண் உரிமை நிறுவனங்களை ஆதரித்தல்** | • உள்ளூர் மட்டத்தில் செயல்படும் சிறிய, முறைசாரா நிறுவனங்கள் முதல் தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் பரப்புரை மற்றும் பொறுப்புக்கூறல் பணிகளில் செயற்படும் பெரிய, உயர்மட்ட நிறுவனங்கள் வரை பெண் உரிமை அமைப்புக்களின் பல்வகைமையை ஆதரித்தல்.<br>• பெண்களின் உரிமைகளை இன்னும் பரந்த அளவில் முன்னேற்றுவதற்கு உழைக்கும் பெண் உரிமை அமைப்புகளை, இதற்கு மேலதிகமாக குறிப்பிட்ட பெண் குழுக்களுக்கு எதிரான வன்முறை மற்றும் பாகுபாடுகளைத் தடுப்பதில் கவனம் செலுத்துவதையும் ஆதரித்தல் உதா. இளைய அல்லது வயதான பெண்கள், இயலாமைகளை உடைய பெண்கள் அல்லது பாலியல் அல்லது இன சிறுபான்மையின பெண்கள்.[15] |

| பிரதான பரிசீலனைகள் | விபரம் |
|---|---|
| சிறந்த வகையான நிதியளிப்புகளை அவதானமாக கருதுதல் | • இயக்கங்களை கட்டியெழுப்ப, எதிர்பாராத வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு பதிலளிப்பதற்கு, பெண் உரிமை அமைப்புகளின் நிறுவன இயலளவை கட்டியெழுப்ப, அவர்களின் நிகழ்ச்சித்திட்ட தாக்கத்தை அதிகரித்தல் மற்றும் நிலையான, கட்டமைப்பு மாற்றத்தை உருவாக்குதல் ஆகியவற்றுக்கான பெண் உரிமை அமைப்புகளின் பணியை சிறப்பாக ஆதரிக்கும் நெகிழ்வான, முக்கியமான மற்றும் நீண்ட கால நிதியுதவியை வழங்குதல்.[16]<br>• பரப்புரை மற்றும் வலையமைப்பு ஆகியவற்றிற்கான நிதியளிப்பு, குறுகிய கால புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் கற்றலுக்கான நெகிழ்வான நிதியளிப்பு மற்றும் நீண்ட கால முக்கிய ஆதரவு உட்பட பல்வேறு அளவிலான பெண் உரிமை அமைப்புகளுக்கு ஆதரவளிப்பதற்கான நிதியளிப்பு முறைகளைக் கருத்தில் கொள்ளுதல்.<br>• சிறிய பெண் உரிமை அமைப்புகளுக்கு வளங்களைப் பெறுவதற்கு மகளிர் நிதி போன்ற விசேட நிதியளிப்பாளர்கள் மூலம் நிதியுதவியை ஆதரித்தல்.[17] |
| நேரடியான நிதியளிப்பை தாண்டிய ஆதரவை வழங்கல் | • தொழில்நுட்ப ஆலோசனைகள், நிதி உதவி மற்றும் கற்றலைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புகள் உட்பட, VAW தடுப்புக்கான பெண் உரிமை அமைப்புக்களின் பணியை வலுப்படுத்தவும் விரிவுபடுத்தவும் அவர்களுக்கு ஆதரவளிக்கும் தொடர்ச்சியான, நெகிழ்வான, நீண்ட கால துணையை வழங்குதல்.<br>• நிதி ஆதாரங்களை பன்முகப்படுத்துவதற்கும் மற்றும் தேசிய மற்றும் உள்ளூர் அரசாங்கங்களிலிருந்து உட்பட உள்ளூரில் வளங்களைத் திரட்டுவதற்கான திறனை வளர்ப்பதற்கு பெண் உரிமை அமைப்புகளை ஆதரித்தல்.<br>• தேசிய பெண்கள் இயக்கங்களுடன் இணைந்து அவர்களின் நிகழ்ச்சி நிரல்களை உலகளாவிய மற்றும் பலதரப்பு தளங்களுக்கு கொண்டு வரவும், பெண் உரிமை அமைப்புகளுக்கு வலையமைப்புகள் மற்றும் கூட்டணிகளை உருவாக்குவதற்கும் குரலெழுப்புவதற்குமான வாய்ப்புகள் மற்றும் தளங்களை உருவாக்குதல். உதாரணமாக, வலையமைப்புகளுக்கு நிதியளிப்பதன் மூலமும் நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதன் மூலமும், முறைசார் அரசாங்கப் பிரதிநிதித்துவத்தில் பெண் உரிமை அமைப்புகளை உள்ளடக்குவதன் மூலமும் (உதா. நியூயோர்க்கில் உள்ள பெண்களின் நிலை குறித்த ஆணைக்குழுவின் (CSW) வருடாந்த இரண்டு வார அமர்வுகளுக்கு).<br>• சமாதான செயன்முறைகள் மற்றும் நிலைத்துநிற்கும் நிதியளிப்பு ஆதரவு உள்ளிட்ட அரசியல் தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறைகளில் பெண் உரிமை அமைப்புகளைச் சேர்ப்பதற்காக பெண்ணிய நிகழ்ச்சி நிரல்களுக்காக சர்வதேச அளவிலும் உள்நாட்டிலும் பரப்புரையாற்றுதல்.[18]<br>• பல்வகைப்பட்ட தீமைகளை எதிர்கொள்ளும் பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெண் உரிமை அமைப்புகளை நிதியளிப்பு சுற்றுகள் அணுகக்கூடியதாகவும் உள்ளடங்கலாகவும் இருப்பதை உறுதிசெய்வதற்காக முற்கூட்டியே ஈடுபடுத்துங்கள்.[19] |
| பெண் உரிமை அமைப்புகளின் பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தை ஆதரித்தல்[20] | • பெண்களின் மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கு (WHRDs) எதிரான வன்முறைகளை ஆவணப்படுத்துதல் மற்றும் பதிலளித்தல் மற்றும் கொள்கை உரையாடல் மற்றும் பரந்த இராஜதந்திர முயற்சிகளின் ஒரு பகுதியாக இதனை உயர்த்துவது உட்பட பெண்களின் மனித உரிமைப் பாதுகாவலர்களை அங்கீகரித்து ஆதரித்தல்.[21] |
| பெண் உரிமை அமைப்புகளின் தற்போதைய பணியின் மீது கட்டியெழுப்புதல் | • பெண் உரிமை அமைப்புகளின் சமூகங்கள் மற்றும் சூழல்கள் தொடர்பான அவர்களின் ஆழமான அறிவை அங்கீகரிப்பதுடன் மதிப்பளியுங்கள்.<br>• பெண் உரிமை அமைப்புகளுக்கு அவர்களின் பணி, கற்றல் மற்றும் தாக்கங்களை ஆவணப்படுத்துவதற்கும் பகிர்ந்து கொள்வதற்கும் அவர்களின் திறனை மேம்படுத்துவதற்கு ஆதரவளிக்கவும். உதா. கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் கற்றல் கட்டமைப்புகள், நிதியளிப்புடனான ஆராய்ச்சி மற்றும் நடைமுறை அடிப்படையிலான கற்றலை ஆவணப்படுத்துதல் ஆகியன.[22]<br>• பெண் உரிமை அமைப்புகளுடன் இணைந்து, அவர்கள் ஊக்குவிக்க முயற்சிக்கும் கட்டமைப்பு மாற்றத்தைக் கண்காணிக்கும், இந்த மாற்றத்தைக் கண்காணித்து அறிக்கையிடுவதற்கான இலகுவான, ஆக்கப்பூர்வமான மற்றும் வினைத்திறனான நடவடிக்கைகளை அனுமதிக்கும் அறிக்கையிடல் அமைப்புகளை இணைந்து உருவாக்குதல்.[23] |
| வலுவான பங்காண்மைகளை கட்டியெழுப்புதல் | • நிதியளிப்பை வடிவமைத்தல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றில் நிபுணத்துவம் வாய்ந்த பெண் உரிமை அமைப்புகளை ஈடுபடுத்துவதுடன் அவர்கள் நிதிச் சபைகளில் நியமிக்கப்படுவதை உறுதி செய்தல்.<br>• நிகழ்ச்சித்திட்ட வரவு செலவுத் திட்டங்களின் கட்டுப்பாடு, தீர்மானமெடுப்பதில் குரலெழுப்புதல் மற்றும் அனைத்து நிலை தகவல்களுக்கான அணுகல் ஆகியவற்றில் பெண் உரிமை அமைப்புகளுடன் சமமான பங்காண்மைகளை வளர்க்கவும்.<br>• கூட்டாக குரல்கொடுத்தல் மற்றும் தாக்கத்தை வலுப்படுத்த, பெண் உரிமை அமைப்புகளுக்கும், பிற சமூக இயக்கங்களுக்கும் இடையே கூட்டணியை கட்டியெழுப்புவதற்கான நிதியளிப்பு மற்றும் ஆதரவு. |

### சம்பவ ஆய்வு: உகாண்டாவில் குரல் எழுப்புதல் மற்றும் CEDOVIP

பெண் உரிமை அமைப்புகள் வளர்ந்து, நிதி மற்றும் ஆதரவிற்கான உள்நாட்டு ஆதாரங்களை உருவாக்கும்போது, நிதியளிப்பவர்கள் மற்றும் பெண் உரிமை அமைப்புகளுக்கு இடையேயான பங்காண்மைகள் காலப்போக்கில் எவ்வாறு உருவாகலாம் என்பதற்கு உகாண்டாவின் Irish Aid மற்றும் Raising Voices மற்றும் CEDOVIP ஆகியவற்றிற்கிடையே நீண்ட கால மற்றும் நெகிழ்வான பங்காண்மை ஒரு சிறந்த நடைமுறை உதாரணம்.

Raising Voices என்பது சமூக விழுமியங்களை மாற்றுவதற்கும் VAW ஐக் குறைப்பதற்குமாக சமூக அடிப்படையிலான அணுகுமுறைகளை உருவாக்கி செயற்படுத்துகின்ற உகாண்டாவை தளமாகக் கொண்ட ஒரு பெண் உரிமை அமைப்பாகும். அதன் பங்காளரான 2003 இல் Raising Voices இனால் இணைந்து நிறுவப்பட்ட குடும்ப வன்முறை தடுப்பு நிலையம் (CEDOVIP), ஒரு சுயாதீனமான உகாண்டா அரச சார்பற்ற நிறுவனமாகும்.

Irish Aid ஆரம்பத்தில் உகாண்டாவில் உள்ள ஐரிஷ் தூதரகம் மூலம் Raising Voices இற்கு நிதியளித்ததுடன், இந்த ஆதரவு Raising Voices அதன் முதன்மையான சமூக அணிதிரட்டல் நிகழ்ச்சித் திட்டமான SASA ஐ உருவாக்க உதவியது. 2012 இல், ஐக்கிய இராச்சியத்தின் கூட்டு நிதியுதவியுடன், SASA இன் எழுந்தமானமான கட்டுப்பாட்டு சோதனை (RCT) தாக்கத்தை அதிகரிப்பதில் வெற்றிகரமான முடிவுகள் மற்றும் சாத்தியக்கூறுகளைக் காட்டியது. Raising Voices வேறுபட்ட சூழல்களில் பயன்படுத்துவதற்கான முறைமையை பின்பற்றத் தொடங்கியதுடன் அதன் பரப்புரை மற்றும் கற்றல் முயற்சிகளை அதிகரித்ததும், Irish Aid அதன் நிதியளிப்பை தூதரகத்திலிருந்து தலைமையகத்திற்கும், நிகழ்ச்சித் திட்ட அடிப்படையிலிருந்து நெகிழ்வான, முக்கிய நிதியளிப்பிற்கு மாற்ற முடிவு செய்தது. Irish Aid, புதிய பங்காளர்கள் மற்றும் நிதியளிப்பவர்களுடன் Raising Voices இனை இணைப்பது மற்றும் அவர்களின் உலகளாவிய செல்வாக்கை வசதிப்படுத்துவது உள்ளிட்ட மேலதிகமான நிதி அல்லாத ஆதரவையும் வழங்கியது.

Raising Voices உகாண்டாவிற்கு அப்பால் அதன் வழிமுறையை விரிவாக்குகையில், CEDOVIP உகாண்டாவில் அவர்களின் நிகழ்ச்சித் திட்டப்பணிகளைத் தொடர்ந்ததுடன், அவர்கள் ஒன்றாக உகாண்டா அரசாங்கத்துடன் பங்காண்மையை நிறுவினர். இது Irish Aid இனை Raising Voices மற்றும் CEDOVIP உடன் இணைந்து இரண்டு ஆண்டு நிலைமாறு காலத்தில் பணியாற்ற உதவியதுடன், இதுநாள்வரை அடையப்பட்ட முன்னேற்றம் அரசு மற்றும் பிற நன்கொடையாளர்களுடனான பங்காண்மை மூலமாக நிலைத்திருப்பதை உறுதிப்படுத்த உதவியது.

**ஆதாரம்:** Esplen, E. (2016) தெற்கு பெண் உரிமை அமைப்புகளுக்கு நன்கொடையாளர் ஆதரவு: முநுஊனு கண்டறிவுகள். பால்நிலை சமத்துவம் குறித்த OECD DAC வலையமைப்பு.

### மேலதிக ஆதாரங்கள்:

'Toward a Feminist Funding Ecosystem: A framework and practical guide' AWID வெளிப்படுத்தும் பெண்ணிய இயக்கங்களின் முன்முயற்சி. 2019. நிதியளிப்பு நடைமுறைகள் பெண்ணிய இயக்கங்களுக்கு எவ்வாறு சிறப்பாகச் சேவை செய்ய முடியும் என்பதை இந்த வழிகாட்டி ஆராய்கிறது.

'Feminist Pocketbook' சமூக மாற்றத்திற்கான பெண்ணியவாதிகளின் கூட்டணி (COFEM). 2017. இந்த பயனுள்ள ஆதாரத்தில் Tipsheet 4: Staying Accountable to Women and Girls மற்றும் Tipsheet 10: Feminist Movement Building ஆகியவை அடங்கும்

'Donor support to southern women's rights organisation: OECD Key Findings' Esplen, E. 2016. இந்த அறிக்கை தெற்கு பெண் உரிமை அமைப்புகளுக்கான நன்கொடையாளர் ஆதரவின் போக்குகள் மற்றும் உத்திகளை ஆவணப்படுத்துவதுடன், தெற்கு பெண்கள் உரிமை அமைப்புகளுக்கான ஆதரவுகளின் அளவு மற்றும் தரத்தை வலுப்படுத்துவதற்கான நன்கொடையாளர்களுக்கான அணுகுமுறைகள், மாதிரிகள் மற்றும் பொறிமுறைகளை அடையாளம் காண்கிறது.

' Standing with the changemakers: lessons from supporting women's movement' Womankind Worldwide. 2017 இந்த அறிக்கை, பெண்களின் உரிமைகளில் முன்னேற்றங்களைக் கொண்டு வருவதில் பெண் உரிமை அமைப்புகள் மற்றும் இயக்கங்களின் வகிபாகம் மற்றும் அவர்களுக்கு ஆதரவளிக்க சர்வதேச சமூகம் என்ன செய்ய முடியும் என்பதை சுட்டிக்காட்டுகிறது.

## சட்டங்கள் மற்றும் கொள்கைகளை அமுல்படுத்தல்

**விளைவு:** இடைநிலைக் கல்விக்கான அணுகல் உட்பட பெண்களுக்கு எதிரான வன்முறையை நிவர்த்தி செய்யும் மற்றும் பால்நிலை சமத்துவத்தை ஊக்குவிக்கும் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்குவதுடன் அவற்றின் அமுலாக்கத்தை வசதிப்படுத்தல்.

**குறிக்கோள்:** நிறுவன மற்றும் கடமை-முன்னெடுப்பாளர்களின் இயலளவு மற்றும் பொறுப்புணர்வை விருத்தி செய்வது உட்பட பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்துவதற்கும் பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதற்குமான சட்டங்கள்[24] மற்றும் கொள்கைகள் உருவாக்கப்பட்டு அமுலாக்கப்படுகின்றன

**விளக்கம்:** Declaration on the Elimination of Violence Against Women, Belém do Pará சமவாயம் Maputo Protocol மற்றும் Instanbul Convention உள்ளிட்ட சர்வதேச மற்றும் பிராந்திய கருவிகளில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களுக்கு உத்தரவாதம் அளிப்பதற்கு தேசிய சட்டங்கள் முதற்படியாகும். உரிமைகளை அங்கீகரித்தல், பாதுகாத்தல் மற்றும் அமுலாக்குதல் ஆகியவற்றுக்கான அடிப்படையை சட்டங்கள் வழங்குகின்றன. அரசாங்கக் கொள்கைகள், மூலோபாயங்கள் மற்றும் பால்நிலை சமத்துவத்தை ஊக்குவிக்கும் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை நிவர்த்தி செய்யும் செயற்திட்டங்கள் ஆகியவை அர்ப்பணிப்பின் முக்கிய செய்தியாகவும், செயற்பாட்டிற்கான கட்டமைப்பை வழங்கவும் முடியும்.

கடந்த 30 ஆண்டுகளில், குடும்ப வன்முறையை நிவர்த்தி செய்வதற்கான சட்டங்களை அறிமுகப்படுத்திய நாடுகளின் எண்ணிக்கை 1990 இல் பூஜ்ஜித்தை அண்மித்திருந்ததுடன், 2020 ஆம் ஆண்டில் 155 ஆக உயர்ந்துள்ளது.[25] சில சந்தர்ப்பங்களில் இலவச சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் சட்ட உதவி உட்பட, குடும்ப வன்முறை வழக்குகளைத் தொடர்வதற்கும், பாதுகாப்பு ஆணைகளைப் பிறப்பிப்பதற்கும், தப்பிப் பிழைத்தவர்களுக்கான சேவைகளுக்கான உரிமைகளை வழங்குவதற்குமான சட்டங்கள் இதில் அடங்கும். பாலியல் துஸ்பிரயோகம், பெண் பிறப்புறுப்பு சிதைவு, குடும்ப வன்முறை, சிறுபராயத் திருமணம் மற்றும் கட்டாயக் குடும்ப கட்டுப்பாடு போன்றவற்றைக் குற்றமாக்குவதற்கான சட்டங்கள் உட்பட VAW ஐத் தடுப்பதற்கு பல குறிப்பான சட்டங்கள் உள்ளன.

பரம்பரை, நிலம் மற்றும் சொத்து உரிமைகள், திருமண காவல் மற்றும் விவாகரத்து உட்பட பால்நிலை சமத்துவத்தை ஊக்குவிக்கும் பரந்தளவிலான சட்டங்கள் VAW இனுடைய அளவைக் குறைப்பதற்கு உதவுகின்றன என்பதற்கு வெளிவரும் சான்றுகள் உள்ளன. உதாரணமாக, இந்தியாவில் உள்ள 16 மாநிலங்களில் VAW அளவின் மீது ஆண்களுக்கும் பெண்களுக்கும் பரம்பரை உரிமைகளை சமப்படுத்துவதன் தாக்கத்தை ஒரு ஆய்வு மதிப்பிட்டதுடன், சட்ட திருத்தங்களுக்குப் பின்னர் திருமணம் செய்துகொண்ட பெண்கள் IPV தொடர்பாக குறைந்தளவு அனுபவங்களையே பெற்றுள்ளனர்.[26] இரண்டாம் நிலைக்கான அணுகலை மேம்படுத்துவதற்கான சட்டங்கள் மற்றும் கொள்கைகள் கூட பெண்களை வலுப்படுத்துவதற்கும், ஆண் பங்காளர்கள் மீது பெண்களின் எதிர்கால பொருளாதாரம் சார்ந்திருக்கும் நிலையைக் குறைப்பதற்கும் முக்கியமானதாகும். ஆண்கள் இடைநிலைக் கல்வியை முடித்திருந்தால், உடலியல் மற்றும்/அல்லது பாலியல் ரீதியான IPV ஐப் புரிவதற்கான வாய்ப்புகள் குறைவாகும்.[27]

இருப்பினும், வலுவான சட்ட மற்றும் கொள்கை கட்டமைப்புகள் பாதுகாப்பு மற்றும் பதிலளிப்பிற்கு முக்கியமானதாகவும் நீதிக்கான பெண்களின் அணுகலை விரிவுபடுத்துவதில் ஒரு முக்கிய பகுதியாகவும் இருந்தாலும், VAW க்கு எதிரான சட்டங்கள் குற்றச்செயல்களைத் தடுக்கும் அல்லது VAW அளவைக் குறைக்கும் என்பதற்கு சிறியளவான சான்றுகளே உள்ளன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.[28] பல நாடுகளில், ஒரு குறிப்பிடத்தக்க அமுலாக்க இடைவெளி உள்ளதுடன் குறிப்பாக அதிக தொலைதூர பகுதிகளில் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் அமுல்படுத்தப்படவில்லை.

சட்டங்கள் மற்றும் கொள்கைகளை வினைத்திறனாக செயற்படுத்துவதற்கு அரசியல் அர்ப்பணிப்பு, ஒதுக்கப்பட்ட பாதீடுகள், பயிற்சி பெற்ற பணியாளர்கள், ஒருங்கிணைந்த நடவடிக்கை மற்றும் சேவைகளுக்கான விரிவான அணுகல் ஆகியவை தேவையாகும்.[29]

**கொள்கை வகுப்பாளர்களுக்கான பிரதான பரிசீலனைகள்:** தேசிய கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் சீர்திருத்தங்களை ஆதரிப்பதுடன் பரப்புரை மேற்கொள்பவர்கள் - சட்டங்கள் மற்றும் கொள்கைகளின் செயற்திறனை விருத்தி செய்யும் போது, அமுலாக்கும் போது மற்றும் கண்காணிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய சில முக்கிய பரிசீலனைகள் பின்வருமாறு:[30]

# ENABLING ENVIRONMENT

| பிரதான பரிசீலனைகள் | விபரம் |
|---|---|
| சீர்திருத்த செயன்முறை | • பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கவும், பாதுகாக்கவும், வழக்குத் தொடரவும், தண்டிக்கவும் மற்றும் நிவாரணம் வழங்கவும், அரசாங்கங்கள் "நியாயமான" நடவடிக்கை எடுக்கவும் தேவைப்படுத்துகின்ற சர்வதேசச் சட்டத்தில் உள்ள "மற்றவர்களை பாதிக்காத" தரநிலையுடன் அரசாங்கங்கள் இணங்குவதை உறுதி செய்தல்.<br>• வன்முறையை வெறுமனே குற்றமாக்குவதைத் தாண்டி, தடுப்பு, விழிப்புணர்வை ஏற்படுத்துதல், நிறுவன வழிமுறைகள் மற்றும் தப்பிப் பிழைத்தவர்களின் நீதித்துறைப் பாதுகாப்பு ஆகியவறில் சிவில் தீர்வுகள் மற்றும் சட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கி விரிவான சட்டமியற்றும் அணுகுமுறையை ஏற்றுக்கொள்ளுதல்.<br>• தப்பிப்பிழைத்தவர்கள், பெண்கள் அமைப்புகள் மற்றும் தொடர்புடைய சிவில் சமூக அமைப்புகள், அரசாங்கத் துறைகள் மற்றும் சேவை வழங்குநர்கள், தேசிய மனித உரிமை நிறுவனங்கள், காவல்துறை, சட்ட வல்லுநர்கள், சுகாதார வல்லுநர்கள், சமூக சேவைகள், தேசிய புள்ளியியல் அலுவலகங்கள், மத மற்றும் சமூகத் தலைவர்கள் உள்ளிட்ட தொடர்புடைய பங்குதாரர்களுடன் கலந்தாலோசிக்கவும். |
| ஏற்பாடுகள் | • பெண்களுக்கு எதிரான வன்முறையை அதனுடைய பரந்த வடிவில் (உடலியல், பாலியல், உணர்ச்சி மற்றும் பொருளாதார வன்முறைகளை உள்ளடக்கி) மற்றும் சர்வதேச மனித உரிமை தரநிலைகளின் பிரகாரம் வரையறுக்கவும். அதன்பின்னர், சட்டம் பாலியல் துன்புறுத்தல், குடும்பத்தில் மற்றும் தனிப்பட்ட உறவுகளில் ஏற்படும் பல்வேறு வகையான வன்முறைகள் உட்பட பல்வேறு வகையான வன்முறைகளுக்கான குறிப்பிட்ட விதிகளை சட்டங்கள் கொண்டிருக்க வேண்டியதுடன், வெவ்வேறு இடங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் (உதா. பொது இடங்கள் வீடுகள், பணியிடங்கள், பாடசாலைகள், இணையத்தள வன்முறை).<br>• பெண்களின் வெவ்வேறு குழுக்களுக்கு எதிராக பாகுபாடு காட்டாமை மற்றும் நலிவடைந்த குழுக்களைச் சேர்ப்பதற்கான ஏற்பாடுகள் உட்பட அனைத்துப் பெண்களையும் சமமாகப் பாதுகாத்தல்.<br>• தப்பிப் பிழைத்தவர்களின் உரிமைகள் உட்பட தேசவழமை மற்றும்/அல்லது மதச் சட்டம் மற்றும் முறைசாரா மற்றும் முறைசார் நீதி அமைப்புகளுக்கு இடையே உள்ள தொடர்பைத் தெளிவுபடுத்துதல். |
| அமுலாக்கம் | • நிறுவனங்களுக்குள்ளான ஒருங்கிணைப்பு பொறிமுறைகளை உருவாக்குதல் உட்பட பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கு பல்வேறு அரச (மற்றும் சிவில் சமூகம்) தரப்பினரால் சட்டங்கள் மற்றும் கொள்கைகளின் விரிவான மற்றும் ஒருங்கிணைந்த அமுலாக்கத்திற்காக தேசிய செயற் திட்டம் அல்லது மூலோபாயத்தை உருவாக்குதல்.<br>• புதிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளைப் பரப்புவதற்கும் பிரபலப்படுத்துவதற்கும் ஒரு குறிப்பான மூலோபாயத்தை உருவாக்குங்கள், ஏனெனில் இது அமுலாக்கத்திற்கும் பால்நிலை ஏற்றத்தாழ்வுகள் மற்றும் வன்முறையை ஏற்றுக்கொள்ளும் தன்மையைச் சுற்றியுள்ள சமூக விழுமியங்களை மாற்றுவதற்கும் முக்கியமானதாகும்.<br>• முன்னரங்கு தடுப்பு மற்றும் பதிலளிப்பு சேவைகள் உட்பட, சட்டங்கள் மற்றும் கொள்கைகளை அமுலாக்குவதற்கு போதுமான வரவுசெலவுத் திட்டங்களைச் சமர்ப்பிக்கவும், உதாரணமாக பால்நிலைக்கு பதிலளிக்கும் பாதீடு (வளங்களை ஒதுக்குவது தொடர்பான சுருக்கத்தைப் பார்க்கவும்).<br>• சுகாதார வல்லுநர்கள், பொலிஸ் மற்றும் நீதித்துறை உத்தியோகத்தர்கள் உட்பட பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு பதிலளிக்கும் கடமை முன்னெடுப்பாளர்களுக்கு விசேட மற்றும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் பால்நிலை உருமாற்ற பயிற்சி மற்றும் நெறிமுறைகளை வழங்குவதன் மூலம் VAW ஐ நிவர்த்தி செய்வதற்கும் பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்துவதற்குமான நிறுவன இயலளவைக் கட்டியெழுப்புதல். வினைத்திறனாக செயற்படுவதற்கு பயிற்சிநெறிகள், பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறையைச் சுற்றியுள்ள தீங்கான மனப்பான்மை மற்றும் விழுமியங்களை நிவர்த்தி செய்வதில் வெளிப்படையாக கவனம் செலுத்த வேண்டும். புத்துணர்ச்சி பயிற்சி மற்றும் பணியில் வழிகாட்டுதல் ஆகியவையும் முக்கியமானதாகும்.<br>• தப்பிப் பிழைத்தவர்கள் பல்வேறு துறைகளால் வழங்கப்படும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மற்றும் ஆதரவு சேவைகளை அணுக முடியும் என்பதை உறுதிப்படுத்தவும் (உதா. சுகாதாரம், பாதுகாப்பு, சட்டம், சமூக சேவைகள்). வன்முறையை எதிர்கொள்ளும் பெண்களுக்கு தகவல் மற்றும் ஆதரவை வழங்க 24 மணிநேர தொலைபேசி உதவிச்சேவைகள் மற்றும் தங்குமிடங்களுக்கான அணுகல் முக்கியமானது.<br>• சட்ட உதவி, விசேட நீதிமன்றங்கள் அல்லது நடைமுறைகள், விசேட பயிற்சி பெற்ற நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றங்கள் மற்றும் தப்பிப் பிழைத்தவர்களின் தனியுரிமை மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பிற வழிமுறைகள் உட்பட நீதிக்கான அணுகலை மேம்படுத்துதல். |

# ENABLING ENVIRONMENT

| பிரதான பரிசீலனைகள் | விபரம் |
|---|---|
| கண்காணிப்பு | • தெளிவான விளைவுகள், குறிகாட்டிகள் மற்றும் கண்காணிக்கப்பட வேண்டிய மைற்கற்களுடன் புதிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளை அமுலாக்குவதற்கான கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் கட்டமைப்பை உருவாக்குதல்.<br>• பல பிரிவு செயலணிக்குழுக்கள், குழுக்கள், தேசிய அறிக்கையாளர்கள் அல்லது கண்காணிப்பு நிலையங்களை நிறுவுதல் போன்ற நிறுவன பொறிமுறைகள் மூலம் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை அமுலாக்குவதனை கண்காணித்தல்.<br>• சிவில் சமூக தரப்பினர் மற்றும் பெண்கள் உரிமை அமைப்புகள் ஆகியன நிழல் அறிக்கையிடல் பொறிமுறைகள் மற்றும் செயற்திறனை கண்காணிக்கும் அறிக்கைகளை உருவாக்குவதுடன் மேலதிக மாற்றத்திற்காக பரப்புரையாற்ற முடியும். |

### உதாரண நாடு: பிரேசில்

பிரேசிலின் மரியா டி பென்ஹா சட்டம் ஒரு முக்கிய சட்டமாகும், இது தனது கணவரின் வன்முறைத் தாக்குதலுக்குப் பின்பு உடல் செயலிலக்கமடைந்த ஒரு பெண் உரிமை ஆர்வலரின் பெயரால் பெயரிடப்பட்டது. இது 2006 இல் இயற்றப்பட்டதுடன், பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறையை எதிர்த்துப் போராடுவதற்கான முதலாவது பிரேசிலிய கூட்டாட்சி சட்டம் இதுவாகும். இந்த சட்டம் வீட்டு மற்றும் குடும்ப வன்முறையின் வடிவங்களை வரையறுத்ததுடன், கடுமையான தண்டனைகளுடன் கூடிய குடும்ப மற்றும் குடும்ப வன்முறைக்கான விசேட நீதிமன்றங்கள், மகளிர் காவல் நிலையங்கள் மற்றும் 60,000 க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கும் நகரங்களில் பெண்களுக்கு 24 மணிநேர தங்குமிடங்கள் உட்பட பல்வேறு தடுப்பு மற்றும் பதிலளிப்பு பொறிமுறைகளை உருவாக்கியுள்ளது. சட்டம் எங்கு, எப்படிப் பயன்படுத்தப்படுகிறது என்பதைக் கண்காணிக்க பெண்கள் தலைமையிலான கண்காணிப்பு நிலையமும் நிறுவப்பட்டது. ஏறக்குறைய அனைத்து பிரேசிலியர்களும் (98%) சட்டத்தைப் பற்றி கேள்விப்பட்டிருந்ததுடன், பெரும்பாலானவர்கள் (66%) அதன் நோக்கம் மற்றும் செயற்பாட்டை நன்கு அறிந்திருக்கிறார்கள் என்று ஆராய்ச்சி வெளிப்படுத்துகிறது. இருப்பினும், வன்முறையைத் தடுப்பதில் உள்ள தாக்கம், உடல் ரீதியான வன்முறையின் நிலவுகை தொடர்பான அறிக்கையிடலுடன் அதிகரிப்புக்கான சில சான்றுகளுடன் கலந்தே உள்ளதுடன், இது அதிகரித்த விழிப்புணர்வு மற்றும் அறிக்கையிடலின் காரணமாக இருக்கலாம். அண்மையில் பிரேசில் பால்நிலை தொடர்பான பெண்களின் கொலையை தெளிவாக வரையறுப்பதுடன், குற்றவாளிகளுக்கான குற்றவியல் தண்டனையை 30 வருடங்கள் வரை அதிகரித்து பெண்கொலை தொடர்பான சட்டத்தை நிறைவேற்றியது.

### மேலும் ஆதாரங்கள்:

Handbook for Legislation on Violence against Women: பொருளாதாரம் மற்றும் சமூக விவகாரங்கள் திணைக்களத்தின் (DESA/DAW) பெண்களின் முன்னேற்றத்திற்கான ஐக்கிய நாடுகளின் பிரிவு. 2010 பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கவும், குற்றவாளிகளைத் தண்டிக்கவும் மற்றும் தப்பிப் பிழைத்தவர்களின் உரிமைகளை உறுதி செய்வதற்குமான சட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கும் வினைத்திறனாக அமுலாக்குவதற்குமான விரிவான வழிகாட்டுதலை வழங்குகிறது.

Protecting Women from Violence - Bridging the Implementation Gap Between Law and Practice: உலகளாவிய குறிகாட்டிகள் குழு. 2019. பெண்கள், வணிகம் மற்றும் சட்டத் தரவுத்தொகுப்பின் அடிப்படையில், சட்டங்களைச் அமுலாக்குவதிலும், பெண்களை வன்முறையிலிருந்து பாதுகாப்பதிலும் உள்ள இடைவெளிகளை இந்தக் குறுகிய சுருக்கம் அடையாளம் காட்டுகிறது.

Do our Laws Promote Gender Equality? A Handbook for CEDAW-based Legal Reviews: CEDAW. 2012. இந்த கையேடு CEDAW உடன் தேசிய சட்டங்களின் இணக்கப்பாட்டை மதிப்பிடுவதற்கான கட்டமைப்பை வழங்குகிறது. தென்கிழக்கு ஆசியாவில் உள்ள பயிற்சியாளர்களை முதன்மையாக இலக்காகக் கொண்டாலும், இது மற்ற பிராந்தியங்களிலும் பயன்படுத்தப்படலாம்.

Women, Business and the Law. உலக வங்கி. இந்த ஆண்டு அறிக்கைகள் 173 நாடுகளில் இருந்து ஒப்பிடக்கூடிய பெண்களை வன்முறையிலிருந்து பாதுகாப்பது உட்பட பல குறிகாட்டிகளை கொண்ட உலகளாவிய கண்காணிப்புத் தரவை வழங்குகின்றன.

Virtual Knowledge Centre legislation module. ஐ.நா பெண்கள் அமைப்பு. தேசிய சட்டத்தை உருவாக்குதல், பரப்புரையாற்றல், அமுலாக்கல் மற்றும் கண்காணித்தல் பற்றிய ஆலோசனைகளை வழங்குகிறது.

VAWG Resource Guide: Citizen Security, Law and Justice Brief: உலக வங்கி. 2015. இந்த சுருக்கம் குடிமக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் நீதி ஆகியவற்றில் VAWG ஐ ஒருங்கிணைப்பதற்கான முக்கிய பகுதிகளை வரையறுக்கின்றது

## வளங்களை ஒதுக்குதல்


**விளைவு:** VAW ஐ நிவர்த்தி செய்வதற்காக, நிகழ்ச்சித்திட்டங்கள், ஆராய்ச்சி மற்றும் சுகாதாரம், கல்வி, சட்ட அமுலாக்கம் மற்றும் சமூக சேவைத் துறைகளின் நிறுவனங்கள் மற்றும் இயலளவுகளை வலுப்படுத்துவதற்கு வளங்களை ஒதுக்கீடு செய்தல்.

**விளைவு:** VAW ஐ நிவர்த்தி செய்வதற்காக, நிகழ்ச்சித்திட்டங்கள், ஆராய்ச்சி மற்றும் சுகாதாரம், கல்வி, சட்ட அமுலாக்கம் மற்றும் சமூக சேவைத் துறைகளின் நிறுவனங்கள் மற்றும் இயலளவுகளை வலுப்படுத்துவதற்கு வளங்களை ஒதுக்கீடு செய்தல்.

**விளக்கம்:** VAW ஐத் தடுப்பதற்கு சாதகமான சூழலை உருவாக்குவதற்கு தேசிய மற்றும் உள்ளூர் அரசாங்கங்கள் நிதி மற்றும் மனித வளங்களைத் தடுப்பிற்காக முதலீடு செய்ய வேண்டும். குறிப்பான தடுப்பு திட்டங்களை உருவாக்கவும் அமுலாக்கவும், ஆராய்ச்சி மற்றும் தரவு சேகரிப்பு, சட்ட மற்றும் கொள்கை சீர்திருத்தங்கள் மற்றும் அரசாங்க அமைப்புகள், சேவைகள் மற்றும் சிவில் சமூக பங்காளர்களின் நீண்ட கால திறனை வலுப்படுத்துதல் ஆகிவற்றிற்கு நிதியளிப்பு தேவையாகும். சுகாதாரம், கல்வி, சட்ட அமுலாக்கம் மற்றும் சமூக சேவைத் துறைகள் உட்பட ஆனால் அவற்றிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் மற்றைய துறைகள் மற்றும் அமைப்புகளிலும் VAW முன்னுரிமை மற்றும் வளம் பெற வேண்டும். நிறுவனங்களில் பால்நிலை பாகுபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் நிறுவன இயலளவை வளர்ப்பதற்கும் வளங்களை ஒதுக்குவது, சாதகமாக்கும் சூழலை வலுப்படுத்துவதற்கு முக்கியமானதாகும்.

உலகளவில், VAW ஐ தடுப்பதற்கான முதலீடு அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், நிதியுதவி பெரும்பாலும் ஒழுங்கற்றதுடன் சவாலின் தாக்கத்திற்கு பொருந்தாத சிறிய அளவிலான செயற்திட்டங்களில் கவனம் செலுத்துகிறது. தேசிய அளவில், VAW க்கு தீர்வு காண்பதற்குப் பொறுப்பான அரசாங்க அமைச்சுக்கள் பெரும்பாலும் சிறியளவான வரவு செலவுத் திட்டங்களைக் கொண்டவையாக இருப்பதுடன், இவை பெரும்பாலும் VAW தடுப்புக்களிலன்றி பதிலளிப்பு சேவைகளிலேயே கவனம் செலுத்துகின்றன-அவையும் வன்முறையால் பாதிக்கப்பட்ட அல்லது அபாயத்திலுள்ள பெண்களில் சிறுபான்மையினரையே ஆதரிக்கின்றன.

வினைத்திறனான தடுப்பு மாதிரிகளின் தாக்க அதிகரிப்பிற்கும், புதிய அணுகுமுறைகள் மற்றும் நடவடிக்கைகளை புத்தாக்கப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் போதுமான வளங்களை ஒதுக்க வேண்டிய அவசியம் உள்ளது.




கடந்த ஐந்தாண்டுகளில், பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதில் 2.042 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அதாவது ஆண்டுக்கு 408 மில்லியன் அ.டொ முதலீடு செய்யப்பட்டுள்ளது. எனினும், இது வருடாந்த ODA இன் 0.002%க்கும் குறைவாகவே உள்ளது.

**கொள்கை வகுப்பாளர்களுக்கான பிரதான பரிசீலனைகள்:** VAW தடுப்புக்கான வளங்களை ஒதுக்கும் போது, தேசிய கொள்கை வகுப்பாளர்களுக்கும் அவர்களின் நிதியளிப்பு பங்காளர்களுக்குமான சில பிரதான பரிசீலனைகள் இங்கே உள்ளன:

| பிரதான பரிசீலனைகள் | விபரம் |
|---|---|
| மூலோபாய மற்றும் சான்று அடிப்படையிலான அணுகுமுறை | • குறிப்பிட்ட தடுப்பு இலக்குகள்/விளைவுகளைக் கண்டறிந்து, அவற்றையும் அவற்றின் வள தாக்கங்களையும் அடைவதற்கான பலவிதமான உத்திகளைக் கவனியுங்கள், உதாரணமாக:<br>» VAW தடுப்பில் முன்னேற்றம் காண்பதற்கு தற்போதுள்ள வாய்ப்புகள் மற்றும் நுழைவுப் புள்ளிகளை அடையாளம் காணுதல் உதா. பிராந்திய முன்முயற்சிகள், புதிய பங்காண்மைகள், சமூக மாற்றங்கள், சேவைகளின் பரவலாக்கம்.<br>» உங்கள் தேசிய சூழலில் ஏற்கனவே பரிசோதிக்கப்பட்டு வினைத்திறனாக இருப்பதாக நிரூபிக்கப்பட்ட தாக்கத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகளைக் கருதவும். நடவடிக்கைகளை எவ்வாறு சிறப்பாக மாற்றியமைப்பது மற்றும் தாக்கத்தை அதிகரிப்பது என்பதைப் புரிந்துகொள்ள நிகழ்ச்சித் திட்ட வடிவமைப்பாளர்கள், அமுலாக்குபவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுடன் கலந்தாலோசிக்கவும்.<br>» VAW ஐத் தடுப்பதற்கான நடவடிக்கைகளின் தாக்கத்தை எவ்வாறு அதிகரிப்பது என்பது தொடர்பான அறிவுரைகளை Community for Understanding Scale Up (CUSP) மற்றும் ALiGN platform காணலாம். |

| பிரதான பரிசீலனைகள் | விபரம் |
| --- | --- |
| | » உங்கள் தேசிய அல்லது உள்ளூர் சூழலில் அமுலாக்குவதற்கு பிற சூழல்களில் வினைத்திறனானதாக இருக்கும் தடுப்பு அணுகுமுறைகளை மாற்றியமைப்பதைக் கருத்திற் கொள்ளுங்கள். இதற்கு தடுப்பு தொடர்பான தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் வலுவான சூழ்நிலை அறிவு இரண்டும் தேவையாகும்.<br>» சான்று அடிப்படையிலான அணுகுமுறைகள் தொடர்பான அறிவுரைகள் What Works to Prevent VAWG இணையத்தளத்தில் காணலாம்[37]<br>» குறைந்த வளங்களைக் கொண்டு அதிகளவான தாக்கத்தை உருவாக்குவதற்கான வாய்ப்புகளை அடையாளம் காணவும், உதாரணமாக, நடந்துகொண்டிருக்கும் முன்முயற்சிகளில் அணுகுமுறைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் அல்லது துறைகளுக்குள் மற்றும் துறைகளுக்கிடையிலும் பணியாற்றுவதன் மூலமான வாய்ப்புகளை கண்டறிதல். |
| வளங்களை திட்டமிடல் | • தடுப்பு நடவடிக்கையை வழங்குவதற்குத் தேவையான குறிப்பான உள்ளீடுகளைக் கண்டறிதல் உதா. நிலையான செலவீனங்கள் (உதா. கட்டிடங்கள், உபகரணங்கள், வாகனங்கள்), அபிவிருத்திச் செலவீனங்கள் (உதா. பயிற்சி, கையேடுகள்), மற்றும் மேலும் நெகிழ்வான செலவீனங்கள் (உதா. பணியாளர்கள், பொருட்கள், வாகனங்கள்/கட்டிடங்களின் பராமரிப்பு).[38]<br>• வெவ்வேறு உள்ளீடுகளின் செலவீனங்களைக் கணக்கிடுங்கள். பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளைச் அமுலாக்க எவ்வளவு செலவாகும் என்பதைக் கணக்கிடும் போது, VAW ஐத் தடுப்பதற்கான நடவடிக்கைகளின் செலவு பகுப்பாய்வுகளை நடத்துவதற்கான வழிகாட்டுதல்களைப் பார்ப்பதுடன், பல்வேறு சூழல்களில் தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு எவ்வளவு செலவாகும் என்பதை ஒப்பிடவும்.<br>• தேவைப்பட்டால் பிற மூலங்களிலிருந்து வளங்களை திரட்டுவதற்கான திட்டத்தை உருவாக்கவும் உதா. பொது/தனியார் பங்காண்மை, பரோபகார நன்கொடைகள் மற்றும் சர்வதேச நன்கொடையாளர்கள்.[39]<br>• நன்கொடையாளர் நிதியுதவியைத் தேடுகிறீர்கள் என்றால், VAW தடுப்பில் முதலீடு செய்ய வேண்டும். கானா, தெற்கு சூடான் மற்றும் பாகிஸ்தானில் தேசிய பொருளாதாரங்கள் மற்றும் சமூகத்தில் VAW இன் தாக்கம் குறித்த DFID-நிதியளிக்கப்பட்ட What Works ஆய்வு போன்ற வன்முறையின் பொருளாதார மற்றும் சமூக செலவுகளை முன்னிலைப்படுத்த பல சான்றுகள் உள்ளன. |
| வளங்களை ஒதுக்கீடு செய்தல் | • பல்-பங்குதாரர் தடுப்பு மூலோபாயங்களை உருவாக்கவும் உரிமையை கட்டியெழுப்பவும் போதுமான நேரத்தை அனுமதிப்பதற்காகவும் பல வருட நிதியளிப்பு சுழற்சியைப் பயன்படுத்தவும், VAW தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்தை வடிவமைத்தல், மாற்றியமைத்தல் மற்றும் அமுலாக்கல் ஆகியவற்றிற்கு தேவையான நிர்வாகம் மற்றும் ஒருங்கிணைப்பு கட்டமைப்புகளை அமைத்தல்.<br>• பெண் உரிமை அமைப்புகளுக்கு பங்காளர்களாகவும் அமுலாக்குபவர்களாகவும் நிதியுதவியளிக்கவும். பெண் உரிமை அமைப்புகளை எவ்வாறு ஆதரிப்பது மற்றும் முதலீடு செய்வது என்பது தொடர்பான முன்னய பகுதியைப் பார்க்கவும்.<br>• மூலோபாயங்கள், நடவடிக்கைகள் மற்றும் சேவைகளை உங்கள் சூழலுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க, அவற்றின் வினைத்திறனைக் கண்காணிக்கவும், அத்துடன் திட்டமிடப்படாத விளைவுகளையும் கண்காணிக்கவும், தடுப்புக்கான சான்று அடிப்படைகளை கட்டியெழுப்பவும் போதுமான ஆராய்ச்சி, பரீட்சார்த்த முயற்சி மற்றும் கண்காணிப்புக்கான வளங்களை உள்ளடக்கவும்.<br>• நிகழ்ச்சித் திட்ட / செயற்திட்ட அளவில், நீண்ட கால நிதியளிப்பை உறுதி செய்யவும். உதாரணமாக, VAW தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு, 1-2 ஆண்டு குறுகிய கால செயற்திட்ட சுழற்சிகள் வன்முறையைத் தடுக்க வேலை செய்யாது என்பதற்கு கணிசமான சான்றுகள் உள்ளன.[40] முன்னணி பணியாளர்களை கவனமாக தேர்ந்தெடுத்து பயிற்றுவிப்பதற்கும், தொடர்ச்சியான ஆதரவு மற்றும் வழிகாட்டலை வழங்கவும் போதுமான நேரம் மற்றும் பாதீடு உள்ளிட்ட உருவாக்கத்திற்கான ஆராய்ச்சி, நடவடிக்கை வடிவமைப்பு / இசைவாக்கம் மற்றும் இயலளவு விருத்திக்கான முன்னேற்றத்திற்கு நேரம் தேவைப்படுகின்றது.[41]<br>• ஒரு நடவடிக்கை முடிவடைந்தவுடன் அர்த்தமுள்ள தலைமைத்துவம் மற்றும் மாற்றத்தைத் தக்கவைக்க சமூகங்களுக்குள்ளான உரிமை உட்பட நிலைத்தன்மைக்காக திட்டமிடவும்.[42] |
| வளங்களை மேற்பார்வை செய்தல | • சம்பந்தப்பட்ட அரசாங்கத் திணைக்களங்களால் நிதி பெறப்படுவதையும், VAW-ஐ நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளுக்குச் செலவிடப்படுவதையும் உறுதிசெய்வதற்கு, விநியோகங்களைக் கண்காணிக்கவும்.<br>• வளப் பயன்பாட்டின் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்து, நன்கொடையாளர்கள், பெண் உரிமை அமைப்புகள்/சிவில் சமூகம் முதலீடு வெறுமனே குறைந்த செலவு என இல்லாமல் நீண்ட காலத்திற்கு (பணத்திற்கான மதிப்பு) செலவீனம் வினைத்திறனானதா என்பதை மையமாகக் கொண்டு நிதியளிப்பானது வினைத்திறனாகவும், விளைதிறனாகவும் பயன்படுத்தப்படுகிறதா என்பதை மதிப்பிட முடியும். |

### உதாரண நாடு : விக்டோரியா, அவுஸ்திரேலியா[43]

அவுஸ்திரேலியாவில், விக்டோரியா மாநிலம் VAW தடுப்புக்கான முழுமையான-அரசாங்க அணுகுமுறையின் உருவாக்கத்திற்கு வழிவகுத்தது. இது VAW தடுப்புக்கான வழக்கை உருவாக்குவதற்கான பணிகளை, National Plan to Prevent Violence against Women and their Children 2010-2022 அதைத் தொடர்ந்து 'Change the Story' தேசிய தடுப்பு கட்டமைப்பு (2015) ஆகியவற்றை உள்ளடக்கியது. உள்ளூர், பிராந்திய மற்றும் அரசாங்க அளவில் தலைமைத்துவம், நிர்வாகம் மற்றும் ஒருங்கிணைப்பு மற்றும் நீண்டகால செயலாக்கம் மற்றும் ஆராய்ச்சிக்காக அர்ப்பணிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ஆகியவற்றில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ANROWS (Australia's National Research Organisation for Women's Safety) உருவாக்கம் மற்றும OurWatch இற்கான அர்ப்பணிக்கப்பட்ட நிதியும் அடங்கும்.

## மேலதிக ஆதாரங்கள்:

### உதாரண நாடு : தென் ஆபிரிக்கா[44]

நவம்பர் 2018 இல், தென்னாப்பிரிக்க ஜனாதிபதி ரமபோசா National Gender-based Violence and Femicide Summit மற்றும் National Strategic Plan ஒழுங்கமைத்தார். பாதீட்டின் மீள்மதிப்பீட்டின் அடிப்படையில் இந்தத் திட்டத்திற்காக அரசாங்கம் ZAR1.6 பில்லியனை (அண்ணளவாக US$92 மில்லியன்) ஒதுக்கியது. தனியார் துறை, அபிவிருத்திப் பங்காளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களிடமிருந்து பெறப்பட்ட பல்துறை GBV நிதியும் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரந்த தேசிய முன்னுரிமைகளுடன் முதலீடுகளை சீரமைக்க அமைக்கப்படும். வளங்களின் ஒதுக்கீடு உட்பட திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வழிநடத்தும் குழு ஜனாதிபதி அலுவலகத்தில் அமைந்துள்ளதுடன் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரசாங்கம் ஆகியன இதன் இணைத் தலைவராக உள்ளது. இந்தத் திட்டம் தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு வளங்களை ஒதுக்குவதுடன், குற்றவியல் நீதி அமைப்பை வலுப்படுத்துவதற்கும் அனைத்து வயது, இடங்கள், இயலாமைகள், பாலியல் நோக்குநிலை, பாலின மற்றும் பால்நிலை அடையாளம், தேசியம் மற்றும் ஏனைய வேறுபாடுகளுக்கு மக்களுக்கான சிறந்த பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்த்தை வழங்குவதற்குமான நடவடிக்கையையும் மேற்கொள்கிறது.

Handbook of National Action Plans on Violence against Women ஐ.நா பெண்கள் அமைப்பு. 2012. வரவு செலவுத் திட்டங்களின் அத்தியாயம் 3.6, வெவ்வேறு நாடுகளின் சூழல்கள் VAW வேலைகளுக்கு எவ்வாறு நிதியளித்தன என்பதற்கான உதாரணங்களை வழங்குகிறது.

Global scoping of advocacy and funding for the prevention of violence against women and girls Equality Institute. 2019. இந்த ஆய்வு முக்கிய நன்கொடையாளர்கள் மற்றும் சர்வதேச அளவில் VAW தடுப்புப் பணிகளுக்கான நிதி முறைகள் பற்றிய பகுப்பாய்வை வழங்குகிறது.

Guidelines for Conducting Cost Analyses of Interventions to Prevent Violence against Women and Girls in Low and Middle Income Settings. VAWG இனை தடுக்க என்ன வேலை செய்கிறது நிகழ்ச்சித் திட்டம். 2019. இந்த வழிகாட்டுதல்கள் VAW தடுப்புத் நடவடிக்கைகளுக்கான செலவீனங்களுக்கான ஒரு தரப்படுத்தப்பட்ட அணுகுமுறையை வழங்குவதுடன், உங்களின் நடவடிக்கையை வழங்குவதற்குத் தேவையான குறிப்பான வளங்களை அடையாளம் காணவும், இந்த வளங்களின் பெறுமதியை எவ்வாறு மதிப்பிடுவது என்பதையும் கண்டறிய உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# இறுதிக் குறிப்புகள்

[1] Alexander-Scott, M. Bell, E. and Holden, J. (2016) DFID Guidance Note: Shifting Social Norms to Tackle Violence Against Women and Girls (VAWG). லண்டன்: VAWG உதவி மையம்

[2] Jewkes, R. மற்றும் பலர். (2019) Community activism approaches to shift harmful gender attitudes, roles and social norms. பிரிட்டோரியா: என்ன வேலை செய்கின்றது.

[3] தேசிய அளவில் சூழ்நிலைப் பகுப்பாய்வை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்த மேலதிக வழிகாட்டலுக்காக, VAW ஐத் தடுப்பதில் கவனம் செலுத்தும் தேசிய உத்திகளை விருத்திசெய்ய, பணிப்புத்தகத்தின் படி 1ஐப் பார்க்கவும்.

[4] Georgia, T. (2015) DFID Guidance Note on Addressing Violence Against Women and Girls (VAWG) Through DFID's Economic Development and Women's Economic Empowerment Programmes – Part B, லண்டன்: VAWG உதவி மையம் VAWG இனை தடுக்க என்ன வேலை செய்கின்றது நிகழ்ச்சித் திட்டம் (2020) 'Economic and Social Costs of Violence: Evidence Brief' பிரிட்டோரியா: என்ன வேலை செய்கின்றது.

[5] Weldon, S.L. மற்றும் Htun, M. (2012) 'Feminist mobilisation and progressive policy change: why governments take action to combat violence against women', பால்நிலை மற்றும் அபிவிருத்தி 21 (2).

[6] V4C நைஜீரியா (2017) Thinking and Working Politically for Legal Reform on Gender Equality. அபுஜா: V4C

[7] Fraser, E மற்றும் Wood, S (2018) VAWG Legislation, ஹெல்ப் டெஸ்க் ஆராய்ச்சி அறிக்கை எண். 156. லண்டன், ருமு: VAWG உதவிச்சேவை.

[8] உதா. இது மேற்கு ஆப்பிரிக்காவில் Gambia; Malawi; மற்றும் Namibia

[9] ஐ.நா பெண்கள் அமைப்பின் (2019) The Big Conversation. Handbook to Address Women against Women in and through the Media. ஜெனிவா

[10] Kerr-Wilson, A.; Gibbs, A.; McAslan Fraser E.; Ramsoomar, L.; Parke, A.; Khuwaja, HMA.; and Rachel Jewkes (2020). A rigorous global evidence review of interventions to prevent violence against women and girls, பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளிடையே வன்முறையைத் தடுக்க என்ன வேலை செய்கிறது உலகளாவிய திட்டம், பிரிட்டோரியா, தென்ஆபிரிக்கா

[11] Bishop, K and McLean, L (2017) Ibid.

[12] Weldon, S.L. மற்றும் Htun, M. (2012) 'Feminist mobilisation and progressive policy change: why governments take action to combat violence against women', பால்நிலை மற்றும் மேம்பாடில் 21 (2).

[13]13 Womankind (2017) Standing with the changemakers: lessons from supporting women's movements. உலகம் முழுவதும் பெண் இனம்.

[14] ActionAid (2020) Women's Rights Organizations Challenging Violence. ActionAid UK.

[15] உலகமெங்கும் பெண்ணினம் (2017) Ibid.

[16] Moosa, Z. and Daly, S. (2015) Ibid. ; Esplen, E. (2016) Ibid.

[17] Esplen, E. (2016) Ibid.

[18] AWID (2019) Ibid.

[19] Esplen, E. (2016) Ibid.

[20] Nagarajan, C and Fraser, E (2016) தேசிய.்.பெரியளவிலான துணை-தேசிய அளவில் VAWG (மற்றும் தொடர்புடைய பால்நிலை விளைவுகளில்) பணிபுரியும் ஆரோக்கியமான WRO/CSO துறைக்கு ஆதரவளித்தல், VAWG உதவிச்சேவை ஆராய்ச்சி அறிக்கை இல. 122. லண்டன், UK: VAWG உதவி மையம்.

[21] உலகமெங்கும் பெண்ணினம் (2017) Ibid.

[22] Esplen, E. (2016) Ibid.

[23] Esplen, E. (2016) Ibid.

[24] இதில் பின்வரும் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் உள்ளடங்கும்: பாலியல் துஸ்பிரயோகத்தை குற்றமாக்குதல் தலைமுறையில் சமத்துவத்தை ஊக்குவித்தல், சிறுபராய திருமணம் மற்றும் FGM தடை பெண்களுக்கு சமத்துவத்தை உறுதிப்படுத்தும் திருமணம், காவல் மற்றும் விவாகரத்து சட்டங்கள், பால்நிலை சமத்துவத்தை ஊக்குவிக்கும் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு தீர்வு காணும் செயற் திட்டங்கள் அடங்கும். கைது உத்தரவுகள் மற்றும் சட்ட உதவி போன்ற நீதி மற்றும் சட்ட அமுலாக்க சேவைகளை செயற்படுத்துவதும் இதில் அடங்கும்

[25] உலக வங்கி (2020) Women, Business and the Law 2020, வாசிங்டன் டி.சி.: உலக வங்கி.

[26] Amaral, Sofia (2017) "மேம்படுத்தப்பட்ட சொத்துரிமைகள் இந்தியாவில் பெண்களுக்கு எதிரான வன்முறையைக் குறைக்குமா?" சமூக மற்றும் பொருளாதார ஆராய்ச்சி நிறுவனம். SSRN இல் கிடைக்கிறது: https://ssrn.com/abstract=2504579. சுருக்கத்திற்கு https://prevention-collaborative.org/wp-content/uploads/2018/11/Study-summary-Inheritance-India-FINAL.pdf ஐப் பார்க்கவும்

[27] Abramsky T, Watts C, Garcia Moreno C, மற்றும் பலர். (2011) What factors are associated with recent intimate partner violence? Findings from the WHO multicountry study on women's health and domestic violence. Biomed Central Public Health; 11(109): 1-17.

[28] Heise, L. (2011) What Works to Prevent Partner Violence: An Evidence Overview.

[29] பெண்களுக்கு எதிரான வன்முறை மீதான தேசிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளை ஏற்றுக்கொள்வது மற்றும் அமுலாக்குவது பற்றிய விரிவான வழிகாட்டுதலை VAW மீதான சட்டத்திற்கான UN கையேட்டில் காணலாம்.

[30] முக்கிய ஆதார பெட்டியில் முன்னிலைப்படுத்தப்பட்ட சான்றுகளிலிருந்தான படிப்பினைகளை அடிப்படையாகக் கொண்டது

[31] Observatório Lei Maria da Penha (Maria de Penha observatory consortium - OBSERVE)

[32] Gattegno, M, Wilkins, J மற்றும் Evans, D (2016) 'The relationship between the Maria de Penha Law and intimate partner violence in two Brazilian states', சர்வதேச ஆரோக்கிய மற்றும் சமத்துவ இதழ், 15: 138.

[33] Gattegno, M, Wilkins, J மற்றும் Evans, D (2016) Ibid.

[34] சமத்துவ நிறுவனம் (2019) Global scoping of advocacy and funding for the prevention of violence against women and girls

[35] Equality Institute (2019) Ibid.

# ENABLING ENVIRONMENT

[36] முக்கிய ஆதார பெட்டியில் முன்னிலைப்படுத்தப்பட்ட சான்றுகளிலிருந்தான படிப்பினைகளை அடிப்படையாகக் கொண்டது

[37] VAW நடவடிக்கைகளில்: VAW prevention curricula, a rigorous evidence review, மற்றும் effective design and implementation elements

[38] VAWG ஐத் தடுக்க என்ன வேலை செய்கிறது எனும் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் VAW ஐத் தடுப்பதன் தாக்கம் மற்றும் செலவுத் திறன் பற்றிய முதலாவது கணிசமான பல நாடுகளின் சான்றுகளை நடாத்தியது. VAW தடுப்பு நடவடிக்கைகளில் பணியாளர்களின் செலவுகள் கணிசமான பகுதியை உருவாக்குவதுடன் அந்த வகை மற்றும் பணியாளர்களுக்கும் பயனாளிகளுக்கும் இடையிலான தொடர்புகளின் தீவிரம் VAW தடுப்புக்கான முக்கிய செலவீனக் காரணி என்று அந்த ஆராய்ச்சி கண்டறிந்துள்ளது. பார்க்கவும்: Torres-Rueda, S., Ferrari, G., Orangi, S., Hitimana, R., Daviaud, E., Tawaih, T., et al (2020) What will it cost to prevent violence against women and girls in low- and middle-income countries? Evidence from Ghana, Kenya, Pakistan, Rwanda, South Africa and Zambia, சுகாதார கொள்கை மற்றும் திட்டமிடல், czaa024.

[39] முக்கிய நன்கொடையாளர்களின் சுருக்கமான பார்வைக்கு சமத்துவ நிறுவனத்தின், Global scoping of advocacy and funding for the prevention of violence against women and girls இனை பார்க்கவும்

[40] VAWG இனை தடுக்க என்ன வேலை செய்கிறது உலகளாவிய ஆராய்ச்சி திட்டம் / சமத்துவ நிறுவனம் (2019)

[41] பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் வினைத்திறனான வடிவமைப்பு மற்றும் அமுலாக்க கூறுகள். VAWG ஐத் தடுக்க என்ன வேலை செய்கிறது? உலகளாவிய நிகழ்ச்சித் திட்ட தொகுப்பு தயாரிப்பு தொடர். தென்னாப்பிரிக்க மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில், பிரிட்டோரியா

[42] Goldmann, L., Lundgren, R., Welbourn, A., Gillespie, D., Bajenja, E., Muvhangom, L. & Michau, L. (2019) On the CUSP: இல்: சமூக விழுமியங்களை மாற்றுவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் தாக்கத்தை அதிகரிப்பதற்கான அரசியல் மற்றும் வாய்ப்புகள், பாலியல் மற்றும் இனவிருத்தி ஆரோக்கியம், 27:2, 51-63.

[43] பார்க்கவும் https://www.vichealth.vic.gov.au/-/media/ResourceCentre/PublicationsandResources/PVAW/Violence-Against-Women-Research-Overview.pdf

[44] ஜனாதிபதி ராமபோசா தென்னாப்பிரிக்கர்களுக்கு எழுதிய கடிதம்: https://www.sabcnews.com/sabcnews/president-ramaphosa-personally-responsible-gender-violence-action-plan/

© ஐ.நா பெண்கள் அமைப்பு 2020

**இந்த ஆவணம் ஐ.நா. பெண்கள் அமைப்பால் உத்தரவளிக்கப்பட்டதுடன் Social Development Direct இனால் உருவாக்கப்பட்டதுமான RESPECT கட்டமைப்பை செயல்படுத்துவதற்கான வழிகாட்டியின் ஒரு பகுதியாகும், அதை இங்கே காணலாம்.**

பரிந்துரைக்கப்பட்ட மேற்கோள்: ஐ.நா. பெண்கள் அமைப்பு,உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் Social Development Direct (2020) சேவைகள் உறுதிப்படுத்தப்பட்டன, RESPECT: பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுத்தல் மூலோபாயச் சுருக்கம்.